சார்பு நீதிமன்றம், குளித்தலை

OS.No. **226 / 2021**

பெயர்: சந்திரமோகன் வா.சா. 1 தேதி **08.04.2025**

குறுக்கு விசாரணை

1. பிரதிவாதிக்கு எந்த ஊர் என்றால் தண்ணீர்பள்ளி, குளித்தலை தாலுகா. நான் திருச்சியில் குடியிருந்து வருகிறேன். பிரதிவாதி விவசாயம் செய்து வருகிறார். என்னுடன் திருச்சி கண்ட்ரோல்மெண்ட் சேர்ந்த கோபாலகிருஷ்ணன் மகன் வெங்கடேஷ் என்பவர் நீதிமன்றத்திற்கு வந்துள்ளார். அவர் எனது தாய்மாமா. எனக்கும், மேற்படி எனது தாய்மாமாவுக்கு நல்ல உறவு உண்டு. என்மீது அவருக்கு நல்ல நம்பிக்கை உண்டு. அவர் கொடுக்கல், வாங்கல் சம்மந்தமாக எனக்கு தெரியுமா என்றால் சிலவற்றை சொல்வார், பலவற்றை சொல்லமாட்டார். மிகவும் முக்கியமான விசயத்தை மட்டும் என்னிடம் சொல்வார். அவருக்கும் இவ்வழக்கின் பிரதிவாதிக்கும் வரவு, செலவு உண்டு என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. பிராது, நோட்டீஸ், பிராமண வாக்குமூலத்தில் சாட்சிகளை வைத்து பணம் கொடுத்ததாக சொல்லவில்லை என்று சொன்னால் என்றால் சொல்லியுள்ளேன். அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல. புரோ நோட்டில் உள்ள சாட்சிகள் எனக்கு பழக்கமானவர்கள் என்றால் சரிதான்.

2. நான் மேற்படி தண்ணீர்பள்ளியில் தான் பிறந்து, வளர்ந்தேன். சாட்சிகளை யார் அழைத்துவந்தார் என்றால் பிரதிவாதி தான் அழைத்து வந்தார். மேற்படி புரோ நோட்டை யார் எழுதினார்கள் என்று என்கு தெரியாது என்றால் கிருஷ்ணமூர்த்தி எழுதினார். அவரை யார் அழைத்து வந்தார் என்றால் நாகரத்தினம் தான் அழைத்துவந்தார். புரோ நோட்டை பூர்த்தி செய்து கொடுத்தற்கு பின்னிட்டு தான் பணம் கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். ஆனால் மேற்படி நிகழ்வுகள் ஒரே நாளில் நடைபெற்றது. மேற்படி புரோ நோட்டு எழுதிய பின்னர் சாட்சிகள் கையெழுத்து போட்டுவிட்டு சென்றுவிட்டார்கள். கிருஷ்ணமூர்த்தியும் சென்றுவிட்டார் என்றால் பணத்தை வாங்கிய பின்னர் அவர் சென்றுவிட்டார். மேற்படி தொகை ரொக்கமாக கொடுக்கப்பட்டது என்றால் ஆமாம். எனக்கு வரவு, செலவிற்காக வங்கியில் கணக்கு உள்ளது. நான் தொகை கொடுப்பதற்கு எவ்வளவு நாட்களுக்கு முன்னர் பிரதிவாதி என்னிடம் கடன் கேட்டார் என்றால் சுமார் 10,15 நாட்களுக்கு முன்னர் கேட்டார். நான் குறிப்பிட்ட தேதி சொல்லி அவரை வர சொன்னேன். என்னிடம் அலைபேசியில் தான் கடன் கேட்டார், நேரடியாக திருச்சிக்கு வந்து பணம் கேட்கவில்லை. நான் மேற்படி தொகையினை வங்கியில் இருந்து

எடுத்துக்கொடுத்தேனா என்றால் கொஞ்சம் வங்கியில் எடுத்தேன் மீதம் கையில் வைத்திருந்தேன். நான் எப்பொழுதும் ரூ.4,00,000 அல்லது 5,00,000/- வைத்திருப்பேன். நான் தற்பொழுது கையில் ரூ.10,000 அல்லது 15,000/- வைத்திருப்பேன். பிரதிவாதி என்னிடம் கடன் வாங்கவும் இல்லை, புரோ நோட்டு எழுதிக்கொடுக்கவும் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி புரோ நோட்டை பிரதிவாதி அன்றைய தேதியில் பணத்தை பெற்றுக்கொண்டு என்னிடம் பிறப்பித்துக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அன்றைய தேதியில் மேற்படி புரோ நோட்டில் சாட்சிகள் யாரும் கையெழுத்து செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி புரோ நோட்டை அன்றைய தேதியில் கிருஷ்ணமூர்த்தி எழுதவில்லை என்றால் சரியல்ல.

3. மேற்படி எனது தாய்மாமா வெங்கடேஷனுக்கும், பிரதிவாதிக்கும் தான் வரவு செலவு உண்டு என்றாலும் மேற்படி வெங்கடேஷ் என்பவரிடம் பிரதிவாதி கடன் பெற்றிருந்தார் என்றாலும் மேற்படி அதற்காக பிறப்பித்துக்கொடுக்கப்பட்ட புரோ நோட்டினை கொண்டு இவ்வழக்கு பிரதிவாதியின் மீது பொய்யாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 சரியான பிரதிபிரயோஜனத்திற்காக பிறப்பிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. உண்மையிலேயே வா.சா.ஆ-1 புரோ நோட்டை எழுதியிருந்தால் மேற்படி சாட்சிகள் பற்றி அறிவிப்பிலோ முதல் விசாரணையிலோ தெரிவித்திருப்போம் என்றால் சரியல்ல. மேற்படி புரோ நோட்டானது பின் தேதியிட்டு உற்பத்தி செய்யப்பட்ட ஒன்றாகும் என்றால் சரியல்ல. எனது வழக்கானது தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/- (ஈ.முத்துசாமி)
சார்பு நீதிபதி
குளித்தலை.